## கடும் சிலிண்டர் தட்டுப்பாடு!

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!




நெல்லை மேற்கு மாவட்டத்தில் 26 இடங்களில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தமிழகத்தை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசை கண்டித்தும் சிலிண்டர் தட்டுப்பாடை தடுக்க தவறிய பா.ஜ.க.அரசை கண்டித்தும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கல்லிடைகுறிச்சியில் பேரூர் செயலாளர் இசக்கி பாண்டியன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் பங்கேற்று கண்டன உரையாற்றினார். நிகழ்வில் மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம் மாவட்ட துணை செயலாளர் மைக்கேல், வழக்கறிஞர் அமைப்பாளர் செல்வ சூடாமண,மாணவரணி நயினார் மற்றும் காங்கிரஸ்,கம்யூனிஸ்ட் கட்சி ம.தி.மு.க.தே. மு.தி.க உள்ளிட்ட கூட்டணிக் கட்சியினர் திரளாக கலந்து கொண்டனர்.



வேலூர் வடக்கு மாவட்டம் காட்பாடி தெற்கு ஒன்றியம் கோட்டநத்தத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது.உடன் ஒன்றியச் செயலாளர் கே.கருணாகரன், ஊராட்சி குழுத்தலைவர் வேல்முருகன் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் காஸ் சிலிண்டரை தட்டுப்பாட்டை தடுக்க தவறிய ஒன்றிய அரசை கண்டித்தும்,தமிழகத்திற்கு நிதி வழங்காமல் தொடர்ந்து வஞ்சித்து வரும் பா.ஜ.க அரசை கண்டித்தும், துணை போகும் அ.தி.மு.க.வை கண்டித்தும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முன்னாள் மத்திய இணை அமைச்சர் தனுஷ்கோடி ஆதித்தன், மாவட்ட காங்கிரஸ் தலைவர் ராமேஸ்வரன், சிபிஐ சடையப்பன்,சிபிஎம் மோகன், ம.தி.மு.க.நிஜாம்,மேயர் ராமகிருஷ்ணன்,தே.மு.தி.க ஜெயச்சந்திரன்,முஸ்லிம் லீக் மீரான் மைதீன்,மனிதநேய ஜனதா கட்சி பாருக், மனிதநேய மக்கள் கட்சி காஜா,மாநகர பொறுப்பாளர்கள் சுப்பிரமணியன், தினேஷ்,முன்னாள் எம்பிக்கள் ராமசுப்பு, விஜிலா சத்யானந்த்,முன்னாள் எம். எல்.ஏ க்கள் மாலை ராஜா, லெட்சுமணன், மாவட்டத் துணைச் செயலாளர் சுரேஷ், இளைஞர் அணி அமைப்பாளர்கள் வில்சன் மணித்துரை,கருப்பசாமி கோட்டையப்பன், பொருளாளர் வண்ணை சேகர், பேச்சிமுத்து,காசிமணி உள்பட கழகத்தினர், கூட்டணிக் கட்சியினர் திரளாக கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில்,ஒன்றிய பா.ஜ.க. அரசின் தவறான வெளியுறவு கொள்கையாலும் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததாலும், ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை கண்டித்தும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதன் அடிமை கூட்டணி கட்சிகளையும் கண்டித்தும் விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி அதனூரில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் கல்பட்டு வி.ராஜா,ஆர்.முருகன், ஆர்.பி.முருகன்,ஒன்றிய பெருந்தலைவர் கலைச்செல்வி மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி ஒன்றிய தி.மு.க. சார்பில் செஞ்சி திருவண்ணாமலை சாலை இந்தியன் வங்கி அருகிலும்,மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டையில் இல்லத்தரசிகள் பயன்படுத்தும் கேஸ் சிலிண்டர் விலையை உயர்த்திய ஒன்றிய பா.ஜ.க. அரசையும்,துணை போகும் அ.தி.மு.க. உள்ளிட்ட என்.டி.ஏகூட்டணியை கண்டித்தும் செஞ்சியில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி கண்டன உரை நிகழ்த்தினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன்,விழுப்புரம் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் வழக்கறிஞர் ரங்க பூபதி,ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போர்க்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.




வேலூர் தெற்கு மாவட்டம் அணைக்கட்டில் மாவட்ட கழக பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. உடன் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, ஒன்றிய கழக செயலாளர்கள் சி.எல். ஞானசேகரன், பி.வெங்கடேசன், குமர பாண்டியன், என்.கஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




தேனி வடக்கு மாவட்டம் பிசி பட்டி பேரூராட்சி தலைவர் வழக்கறிஞர் மிதுன் சக்கரவர்த்தி ஏற்பாட்டில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை என்று ஒன்றிய பாஜ.க. அரசை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. பேரூர் செயலாளர் செல்வராஜ் நன்றி உரையாற்றினார்.



சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் முதல்வர் ஆணையின் பேரில் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல். ஏ தலைமையில் மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.